



admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்






| Vol: 03 | Issue: 15 | 4 Pages | 15.8.2025 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 1 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 03 | இதழ்: 15 | 4 பக்கங்கள் | 15.8.2025 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |




அவாவென்ப எல்லா உயிர்க்குமெஞ் ஞான்றுந்
தவாஅப் பிறப்பீனும் வித்து

**விளக்கம்:**

**எல்லா உயிர்களுக்கும் எக்காலத்திலும் ஒழியாமல்வருகின்ற பிறவித்துன்பத்தை உண்டாக்கும் வித்து அவா என்றுக் கூறுவர்.**

# நாமக்கல் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியை முதல்வர் மு.க. ஸ்டாலின் தொடங்கி வைத்தார்

சென்னை, ஆக. 15

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:

தமிழ்நாடு முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் இன்று (14.8.2025) தலைமைச் செயலகத்தில், கூட்டுறவுத் துறை சார்பில் சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியிலிருந்து பிரித்து நாமக்கல் மாவட்டத்தை செயல் எல்லையாகக் கொண்டு புதிதாக உருவாக்கப்பட்டுள்ள நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியை தொடங்கி வைத்தார்.

நாமக்கல் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியில் 165 தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களும், 4 மலைவாழ் மக்கள் பெரும் பலநோக்கு கூட்டுறவு சங்கங்களும், 393 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களும், 86 நெசவாளர் கூட்டுறவு சங்கங்களும், 26 பணியாளர் கூட்டுறவுக் கடன் சங்கங்களும், 3 வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கங்களும், 5 கூட்டுறவு நகர வங்கிகளும், 7 தொடக்கக் கூட்டுறவு வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளும் மற்றும் ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலை உள்ளிட்ட 746 சங்கங்கள் இணைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

நாமக்கல் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி ரூ.76.19 கோடி பங்குத் தொகையுடனும் ரூ.1826.56 கோடி இட்டு வைப்பும் ரூ.1636.07 கோடி கடன் நிலுவையும் கொண்டு செயல்படத் தொடங்கியுள்ளது. இவ்வங்கியில் 20242025ஆம் நிதியாண்டில் 55,583 விவசாயிகளுக்குப் பயிர்க்கடனாக ரூ.625.81 கோடியும், கால்நடை பராமரிப்புக்கடனாக 14,346 விவசாயிகளுக்கு ரூ.117.86 கோடியும், மத்திய காலக் கடனாக 1,324 விவசாயிகளுக்கு ரூ.13.78 கோடியும், நகைக்கடனாக 1,64,969 நபர்களுக்கு ரூ.1,489.81 கோடியும், மகளிர் சுய உதவிக்குழு கடனாக 1,878 குழுக்களுக்கு ரூ.162.65 கோடியும், 473 மாற்றுத்திறனாளிகளுக்குக் கடனாக ரூ.2.69 கோடியும், 180 விவசாயிகளுக்கு தானிய ஈட்டுக் கடனாக ரூ.11.85 கோடியும், 776 கூட்டுப்பொறுப்பு குழுக்களுக்குக் கடனாகரூ.3.99கோடியும்வழங்கப்பட்டு உள்ளன.

மேலும், தமிழ்நாடு அரசின் சிறப்புத் திட்டமான கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் ரூ.34 லட்சமும், டாம்கோ திட்டத்தின் கீழ் ரூ.82 லட்சமும், டாப்செட்கோ திட்டத்தின் கீழ் ரூ.3.91 கோடியும், தாட்கோ திட்டத்தின் கீழ் ரூ.45 லட்சமும், கல்விக்கடனாக ரூ.63 லட்சமும், மூன்றாம் பாலினத்தவர்களுக்கான சிறகுகள் திட்டத்தின் கீழ் ரூ.2.50 லட்சமும், விதவைகளுக்குக் கடன் தொகையாக ரூ.68 லட்சமும் இவ்வங்கியின் மூலம் வழங்கப்பட்டு உள்ளன. தமிழ்நாடு அரசின் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் மூலம் மாதந்தோறும் 15,273







மகளிருக்கும், புதுமைப்பெண் திட்டத்தின் மூலம் 33 மாணவிகளுக்கும், தமிழ்ப்புதல்வன் திட்டத்தின் கீழ் 397 மாணவர்களுக்கும் வங்கி கணக்கில் ரூ.1000 வரவு வைக்கப்படுகிறது.

நாமக்கல் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் வாடிக்கையாளர்கள் எளிதில் பணம் பெறும் வகையில் தானியங்கி பணம் வழங்கும் இயந்திரங்கள் நிறுவப்பட்டு வாடிக்கையாளர்களுக்குச் சேவை அளித்து வருகின்றது. நடமாடும் தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம் மற்றும் POS இயந்திரங்கள் வாயிலாகவும் சிறப்பான சேவை அளிக்கப்பட்டு வருகின்றது. அனைத்து கிளைகளிலும் பாதுகாப்பு பெட்டக வசதிகள் உள்ளன.

சுமார் 30 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழ்நாட்டில் முதலாவதாக உருவாக்கப்பட்டுள்ள நாமக்கல் மாவட்ட மத்தியக்கூட்டுறவு வங்கி ஒரு மேலாண்ம இயக்குநர், ஒரு முதன்மை வருவாய் அலுவலர், ஒரு பொது மேலாளர், 2 உதவிப் பொது மேலாளர்கள், 23 மேலாளர்கள், 34 உதவி மேலாளர்கள், 93 உதவியாளர்கள், 4 அலுவலக உதவியாளர்கள் ஆகிய 159 பணியாளர்களுடன் செயல்படும்.

இந்த நிகழ்ச்சியில், துணை முதல்அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மா. மதிவேந்தன், தலைமைச்செயலாளர் நா. முருகானந்தம், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரதா சாகு, கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளர் (நுகர்வோர் பணிகள்) சா.ப. அம்ரித், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

நாமக்கல் மாவட்டத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் கே.ஆர்.என். ராஜேஷ் குமார், மாதேஷ், வி.எஸ். மாதேஸ்வரன், சட்டமன்ற உறுப்பினர்கள் பி. ராமலிங்கம், கே. பொன்னுசாமி, கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் க. நந்தகுமார், நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் துர்கா மூர்த்தி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அகதிகள் படகு கடலில் கவிழ்ந்து விபத்து 20 பேர் பலி



ரோம், ஆக. 15

பொருளாதாரம் மற்றும் வாழ்வாதாரத்தை தேடி ஆப்ரிக்கா, எகிப்து, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், ஈராக், சிரியா உள்பட பல்வேறு நாடுகளை சேர்ந்த ஆயிரக்கணக்கானோர் அகதிகளாக கடல் வழியாக சட்டவிரோதமாக ஐரோப்பிய நாடுகளுக்குள் நுழையும் ஆபத்தான பயணம் மேற்கொள்கின்றனர். இந்த பயணத்தின் போது விபத்துகள் ஏற்பட்டு உயிரிழப்பு சம்பவங்களும் அரங்கேறி வருகிறது.

இந்நிலையில், ஆப்பிரிக்க நாடுகளில் இருந்து 97 பேர் லிபியாவில் இருந்து படகில் மத்திய தரைக்கடல் வழியாக இன்று ஐரோப்பிய நாடுகளுக்குள் சட்டவிரோத அகதிகளாக நுழையும் ஆபத்தான பயணத்தை மேற்கொண்டுள்ளனர்.

அகதிகள் பயணித்த படகு இத்தாலியின் லெபிடுசா தீவு அருகே சென்றபோது திடீரென கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் படகில் பயணித்த அனைவரும் கடலில் மூழ்கினர்.

இந்த விபத்து குறித்து தகவலறிந்த இத்தாலி கடற்படையினர் சம்பவம் இடத்திற்கு விரைந்து சென்று மீட்புக்குழு பணியில் ஈடுபட்டனர். இதில் 60 பேர் உயிருடன் மீட்கப்பட்டனர். ஆனாலும், இந்த சம்பவத்தில் 20 அகதிகள் கடலில் மூழ்கி உயிரிழந்தனர். 20 பேரின் உடல்களும் மீட்கப்பட்டுள்ளன. எஞ்சிய 17 பேரின் நிலை என்ன? என்று தெரியாத நிலையில் அவர்களை தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

# டொனெட்ஸ்க் பிராந்தியத்தை ரஷியாவுக்கு விட்டு தரமாட்டேன் உக்ரைன் அதிபர் திட்டவட்டம்



கீவ், ஆக. 15

ரஷியாஉக்ரைன்இடையேயானபோர்3ஆண்டுகளுக்கு மேலாக நீடித்து வருகிறது. இந்தநிலையில் இப்போரை முடிவுக்கு கொண்டு வர அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் முயற்சித்து வருகிறார். ரஷிய அதிபர் புதினுடன் வருகிற 15ம் தேதி டிரம்ப் பேச்சுவார்த்தை நடத்த உள்ளார்.

அமைதி ஒப்பந்தத்தின்படி சில நிலங்களை உக்ரைன் விட்டுக்கொடுக்க வேண்டியதிருக்கும். இரு நாடுகளும் நில பரிமாற்றங்கள் செய்து கொள்ள வேண்டும் என்று டிரம்ப் தெரிவித்தார். இதற்கு உக்ரைன் அதிபர் ஜெலென்ஸ்கி எதிர்ப்பு தெரிவித்தார். இந்தநிலையில், ஜெலென்ஸ்கி கூறியதாவது:

போர் நிறுத்த ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக உக்ரைன் கட்டுப்பாட்டில் உள்ள டொனெட்ஸ்க் பிராந்தியத்தின் மீதமுள்ள 30 சதவீதத்திலிருந்து உக்ரைன் விலக வேண்டும் என்று ரஷிய அதிபர் புதின் விரும்புகிறார். உக்ரைன் தனது கட்டுப்பாட்டில்உள்ளபிரதேசங்களிலிருந்துவிலகாது.அதுஅரசியலமைப்பிற்கு முரணானது. எதிர்கால ரஷிய படையெடுப்பிற்கு ஒரு ஊக்கமாக மட்டுமே செயல்படும் என்றார்.

# உக்ரைன் அதிபர் ஜெர்மனி பயணம் காரணம் என்ன?



கீவ், ஆக. 15

உக்ரைன், ரஷியா இடையேயான போர் இன்று 1 ஆயிரத்து 266வது நாளாக நீடித்து வருகிறது. இந்த போரில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர்.

இதனிடையே, இந்த போரை முடிவுக்கு கொண்டுவர அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் தீவிரம் காட்டி வருகிறார். அந்த வகையில் வரும் வெள்ளிக்கிழமை அமெரிக்காவின் அலாஸ்காவில் அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் ரஷிய அதிபர் புதின் இடையே பேச்சுவார்த்தை நடைபெற உள்ளது. இந்த பேச்சுவார்த்தையின்போது உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டுவருவது தொடர்பாக இருநாட்டு தலைவர்களும் முக்கிய முடிவு எடுப்பார்கள் என தகவல் வெளியாகியுள்ளது.

ரஷிய அதிபருடனான சந்திப்பிற்குமுன் உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி, ஐரோப்பிய யூனியன் நாடுகளின் தலைவர்களுடன் அமெரிக்க ஜனாதிபதி இன்று காணொலி மூலம் பேச்சுவார்த்தை நடத்துகிறார்.

இந்நிலையில், உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி இன்று ஜெர்மனி செல்கிறார். ஜெர்மனி அதிபர் பில்ட்ரிட்ச் மெர்சை உக்ரைன் அதிபர் சந்திக்கிறார். இந்த சந்திப்பின்போது ரஷியாவுக்கு எதிரான போரில் தங்கள் நிலைப்பாடு, போர் நிறுத்தம் தொடர்பாக மேற்கொள்ளப்படும் முக்கிய முடிவுகள் குறித்து ஜெர்மனி அதிபரிடம் ஜெலன்ஸ்கி பேச்சுவார்த்தை நடத்துகிறார். மேலும், அமெரிக்க ஜனாதிபதியுடன் ஐரோப்பிய நாடுகளின் தலைவர்கள் காணொலி மூலம் பேச்சுவார்த்தை நடத்தும்போது அந்த பேச்சுவார்த்தையில் ஜெலன்ஸ்கியும் பங்கேற்கிறார். இந்த பேச்சுவார்த்தையின்போது ரஷியாவுடனான போரில் உக்ரைனின் நிலைப்பாடு குறித்தும் போர் நிறுத்தம் தொடர்பான ஒப்பந்தங்கள் குறித்து டிரம்ப் இடம் ஜெலன்ஸ்கி தங்கள் தரப்பு கோரிக்கையை முன்வைப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# வெள்ளச்சேரியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட சிறப்பு முகாம்

மாதவரம் தொகுதி வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அரக்கம்பாக்கம், பாண்டேஸ்வரம், வெள்ளச்சேரி ஊராட்சிகளுக்கு ஆவடி வட்டாட்சியர் காயத்ரி தலைமையில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் வெள்ளச்சேரி சமுதாய நலக்கூடத்தில் நடைபெற்றது.வில்லிவாக்கம் வடக்கு ஒன்றிய திமுக செயலாளர் மோரை கோ.தயாளன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மோரை மு.சதிஷ்குமார், வில்லிவாக்கம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஞானேஸ்வரி, இராமகிருஷ்ணன், அரக்கம்பாக்கம் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் கோவிந்தராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.இம்முகாமில் வில்லிவாக்கம் வடக்கு ஒன்றிய திமுக நிர்வாகிகள் ஏழுமலை, முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் பிரபு, தயாநிதி, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் இளம்பரிதி, துணை அமைப்பாளர் ஹரிகிருஷ்ணன், கர்லபாக்கம் பாபு, பாஸ்கர், அன்பரசு, வருவாய் அலுவலர் சரண்யா, கிராம நிர்வாக அலுவலர்கள் வினோத் சந்திரன், கவிதா, மின்வாரிய உதவி செயற்பொறியாளர் ராஜேஷ்சன், உதவி பொறியாளர் தக்ஷிதா மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# ஏன் கைது செய்கிறீர்கள்? என கேள்வி கேட்ட இருவரை போலீசார் தாக்கியுள்ளனர்: வன்னி அரசு



சென்னை, ஆக. 15

விடுதலை சிறுத்தைகள் கட்சி துணைப்பொதுச்செயலாளர் வன்னி அரசு வெளியிட்டுள்ள எக்ஸ் தளப்பதிவில் கூறப்பட்டிருப்பதாவது:

சென்னை மாநகராட்சியின் தூய்மை பணியாளர்கள் தங்களை நிரந்தரப்படுத்தக்கோரி கடந்த 13 நாட்களாக அறவழியில் போராடி வந்தனர். அவர்களது கோரிக்கை ஞாயமானது என்பதை விடுதலைச்சிறுத்தைகள் தலைவர் தொல்.திருமாவளவன் போராட்டக்களத்திற்கு சென்று ஆதரவு தெரிவித்தார்.

இடதுசாரி கட்சித்தலைவர்களுடன் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலினை சந்தித்து தூய்மை பணியாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தினார். இச்சூழலில், நீதிமன்ற உத்தரவின் பேரில் போராடும் மக்களை நள்ளிரவில் கைது செய்துள்ளது காவல்துறை. போராட்டத்தை ஆதரித்த பல சமூக செயற்பாட்டாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறிப்பாக வழக்கறிஞர் நிலவுமொழிமற்றும் சமூக செயற்பாட்டாளர்வளர்மதி போன்றோர் கைது செய்யப்பட்டு இரவு காவல்நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளனர். ஏன் கைது செய்கிறீர்கள்? என கேள்வி கேட்ட தோழர்கள் இருவரையும் போலீசார் கடுமையாக தாக்கியுள்ளனர். காவல் துறையின் இப்போக்கு வன்மையான கண்டனத்துக்குரியது.

ஜனநாயக ரீதியாக போராடிய மக்களையும் ஆதரவாளர்களையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும். நீதிமன்ற உத்தரவே ஜனநாயகத்துக்கு எதிரானதாகும். நீதிமன்றமும்காவல்துறையும்இணைந்து நடத்தும் மக்கள் விரோதப்போக்கு கவலைக்குரியதாக உள்ளது. தமிழ்நாடு அரசு உடனடியாக கைது செய்யப்பட்டோரை விடுதலை செய்வதோடு, போடப்பட்டுள்ள வழக்குகளை திரும்ப பெற வேண்டும் என விடுதலைச்சிறுத்தைகள் சார்பில் கோரிக்கை வைக்கின்றோம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# கோபிசெட்டிபாளையம் ஆல்டிரடேர்ஸ் அசோசியேசன் குடும்ப உறவுகள் சங்கமிக்கும் விழா

ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் ஆல் டிரடேர்ஸ் அசோசியேசன் குடும்ப உறவுகள் சங்கமிக்கும் விழா கல்லூரி பிரிவில் உள்ள கார்த்திகேயன் மஹாலில் நடைபெற்றது. விழாவின் தொடக்கமாக இறைவணக்கம், குத்துவிளக்கேற்றுதல், பரதநாட்டியம் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற்றது. விழாவிற்கு சங்க தலைவர் ஜி. எஸ். வேலுமணி தலைமை தாங்கி வரவேற்று பேசினார். விழாவில் சங்க செயல்பாடுகள் பற்றி கொடிவேரி அணை, பவானி நதி பாசன விவசாயிகள் சங்க தலைவர் சுபி. தளபதி விளக்கி பேசினார். பிசினஸ் ஆன் ஆட்டோ பைலட் பற்றி ஜேம்ஸ் வினித், ஆரோக்கியம் பற்றி டாக்டர். மோ. சுபாஷினி, சண்முக வடிவேலின் நகைச்சுவை பேச்சும் நடைபெற்றது. தொடர்ந்து நலத்திட்டங்கள் வழங்கும் நிகழ்ச்சியும் நடைபெற்றது. இதனை கோபி அரசு மருத்துவ மனை தலைமை மருத்துவ அலுவலர் கல்யாணி, கோபி வேங்கம்மையார் நகராட்சி உயர் நிலை பள்ளி எஸ்இடிசி சிறப்பு கல்வி பயிற்சி மையம், டி. எஸ். ராமன் சரோஜினி விடுதி ஆகியோர் பெற்று கொண்டனர். மேலும் விழாவில் வாழ்நாள் சாதனையாளர் விருதை கோபி இருதய நல மருத்துவர் ஜி. ரவீந்திரன், கோபி பொது மருத்துவர் யு. கே. தாண்டவ மூர்த்தி, அபி மருத்துவ மனை மருத்துவர் எஸ்.குமரேசன், கோபி தமிழ் நகர் ஏ. அன்பரசு ஆகியோர் பெற்றனர். சாதனையாளர் விருது மற்றும் நலத்திட்டங்கள் வழங்கி கோபி சார் ஆட்சியர் சி. சிவானந்தம், சென்னை தீவிரவாத தடுப்பு பிரிவு காவல் கண்காணிப்பாளர் அர. அருளரசு ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.சங்க உறுப்பினர்களில் 50ஆண்டுகளுக்கு மேல் தொழில் புரிந்து வரும் நிறுவனர்களை பாராட்டி கௌரவித்து, சாதனையாளர் விருதும் வழங்கப்பட்டது.குடும்ப விழாவில் சங்க நிர்வாகிகளான, செயலாளர் எம். பி. துரை, பொருளாளர் பி. பொன்துரை, துணை தலைவர்கள் ஜி.டி. செல்வராஜ், ஜி.டி.சேகர், பி. ராமநாதன், ஆர். மணிவண்ணன், துணை செயலாளர்கள் கே. பாஸ்கர், டி. சாமுவேல் துரைசிங், ஒருங்கிணைப்பாளர் என். சண்முகம், செயற்குழு உறுப்பினர்கள் ஜி. சி. ஆர். வைரவேல், ஜி. எல். வெள்ளிங்கிரி, எம். சுப்பிரமணியம், ஏ. ஜெகநாதன், ஜி. வி. கிருஷ்ணமூர்த்தி, என். காளியப்பன், பி. ஆர். என். செல்வராஜ், ஏ. பாலமுருகன்,

ஜி. என். நாராயணமூர்த்தி, ஜி. ஏ. ராமசந்திரன் உட்பட உறுப்பினர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தார்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.





விழாவில் அனைவருக்கும் சைவ மற்றும் அசைவ விருந்துகள் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.




# தமிழ்நாட்டில் இந்த ஆண்டு 46.5 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் அமைச்சர் சக்கரபாணி



சென்னை, ஆக. 15
உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் சக்கரபாணி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது;

"தமிழ்நாட்டில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான கழக அரசு பொறுப்பேற்றது முதல் அனைத்துத் தரப்பு மக்களும் சிறப்பான முன்னேற்றம் அடைந்து வருகின்றனர். குறிப்பாக நெல் விவசாயிகள் பெரிதும் பயனடைந்துள்ளனர். கழக அரசு பொறுப்பேற்ற ஆண்டில் 202122 நெல் கொள்முதல் பருவத்தில் 43.27 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. அதன் தொடர்ச்சியாக 202425 நெல் கொள்முதல் பருவத்தில் தமிழ்நாட்டின் வரலாற்றில் நம் முதல்அமைச்சரின் பொற்கால ஆட்சியில் என்றுமில்லாத அளவிற்கு இன்று (13.08.2025) வரை 46.5 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

கலைஞர் கருணாநிதி ஆட்சியில் தமிழ்நாடு அரசின் ஊக்கத்தொகையாக சன்னரக நெல் குவிண்டால் ஒன்றிற்கு ரூ.70/ ஆகவும் பொதுரகத்திற்கு ரூ.50/ ஆகவும் வழங்கப்பட்டு வந்தது. கடந்த அ.தி.மு.க. ஆட்சியின் பத்தாண்டுகளில் நெல்கொள்முதலுக்கான மாநில அரசின் ஊக்கத்தொகை உயர்த்தி வழங்கப்படவே இல்லை.

முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் 202122 சந்தைப் பருவத்திற்கு சன்னரகம் குவிண்டால் ஒன்றிற்கு ரூ.100/ ஆகவும் பொதுரகத்திற்கு ரூ.75/ ஆகவும் உயர்த்தி வழங்க ஆணையிட்டார்கள். மாநில அரசின் ஊக்கத்தொகை படிப்படியாக உயர்த்தப்பட்டு, தற்போது சன்னரகத்திற்கு குவிண்டாலுக்கு ரூ.130/ ஆகவும் பொதுரகத்திற்கு ரூ.105/ ஆகவும் வழங்கப்பட்டு வருகிறது. கழக ஆட்சி பொறுப்பேற்ற போது சன்னரகம் குவிண்டால் ஒன்றிற்கு ரூ.1958/ ஆகவும் பொதுரகம் ரூ.1918/ ஆகவும் இருந்தது.

வருகின்ற 202526 பருவத்திற்கு முதல்அமைச்சர் தமிழ்நாடு அரசின் ஊக்கத்தொகையாக குவிண்டால் ஒன்றிற்குச் சன்னரகத்திற்கு ரூ.156/ ஆகவும், பொதுரகத்திற்கு ரூ.131/ ஆகவும் உயர்த்தி அறிவித்துள்ளார். தற்போது 202526 பருவத்திற்கு சன்னரக நெல் குவிண்டால் ஒன்றிற்கு ரூ.2545/ ஆகவும், பொதுரக நெல் குவிண்டால் ஒன்றிற்கு ரூ.2500/ ஆகவும் வழங்கப்படும்.

நம் முதல்அமைச்சரின் 51 மாத கால ஆட்சியில் இது வரை மொத்தம் 1.83 கோடி மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு விவசாயிகளுக்கு 40,440.21 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இதில் தமிழ்நாடு அரசின் ஊக்கத்தொகையாக மட்டும் ரூ.1,816.46 கோடி வழங்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமின்றி நெல் கொள்முதல் பருவம் அக்டோபர் முதல் நாள்தான் தொடங்கும். செப்டம்பரில் அறுவடையாகும் நெல்லை மழைக் காலத்தில் அக்டோபர் மாதத்தில் வாங்கும் நிலை தான் இருந்தது. இதை மாற்றி செப்டம்பர் மாதமே அக்டோபரில் தொடங்கும் பருவ விலையில் நெல் கொள்முதல் செய்திட நம்முடைய முதல்அமைச்சர், இந்தியப் பிரதமருக்கு கடிதம் எழுதி, அனுமதி பெற்று 20222023 ஆண்டு முதல் செப்டம்பரிலேயே கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. இந்த ஆண்டும் செப்டம்பர் முதல் நாளிலிருந்து கொள்முதல் செய்ய மத்திய அரசு அனுமதித்துள்ளது.


"ஒரு நெல் மணி கூட வீணாகக் கூடாது" என்று முதல்அமைச்சர் அறிவுறுத்தியதால் திறந்த வெளியில் வைக்காமல் மேற்கூரையுடன் கூடிய நவீன நெல் சேமிப்புத்தளங்களில் நெல் சேமிக்கப்படுகிறது. 333 கோடியே 7 லட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்ட 4 லட்சத்து 3 ஆயிரத்து 350 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 26 நவீன நெல் சேமிப்பு வளாகங்கள் தற்போது பயன்பாட்டில் உள்ளன.

25 கோடியே 70 லட்சம் ரூபாய் மதிப்பில் 18 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 2 நெல் சேமிப்பு வளாகங்கள் கட்டி நடவடிக்கையில் உள்ளது. 2025–2026 ஆம் ஆண்டில் டெல்டா மாவட்டங்களில் 2 லட்சத்து 63 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 20 நவீன சேமிப்பு வளாகங்கள் மற்றும் டெல்டா அல்லாத மாவட்டங்களில் 49 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 6 நவீன சேமிப்பு வளாகங்கள்என ஆகமொத்தம் 3 லட்சத்து 12 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 26 நவீன சேமிப்பு வளாகங்கள் 469 கோடியே ஒரு லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்ட அரசாணை வெளியிடப்பட்டுநடவடிக்கையில் உள்ளது.

ஆக மொத்தம் இந்த ஆட்சி பொறுப்பேற்றது முதல் இதுவரை விவசாயிகளின் நலனை முன்னிறுத்தி ரூபாய் 827 கோடியே 78 லட்சம் மதிப்பீட்டில் 7 லட்சத்து 33 ஆயிரத்து 350 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட மேற்கூரை அமைப்புடன் கூடிய 57 நவீன நெல் சேமிப்பு வளாகங்கள் கட்டுவதற்கு அறிவிப்புகள் வெளியிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இதனால் வருங்காலங்களில் திறந்தவெளியில் நெல்லை சேமிக்க வேண்டிய தேவை எழாது. இந்த ஆண்டு நெல்வரத்து அதிகமாக வரலாறு காணாத வகையிலிருந்தாலும் எதிர்பாராத அடிக்கடி மழை பெய்தபோதும் நெல்மணிகள் மழையில் நனையாமல் காப்பாற்றப்பட்டுள்ளன. தஞ்சாவூர் மாவட்டத்தில் நெல்வரத்து அதிகமாக இருந்ததால் சில இடங்களில் தேக்கம் ஏற்பட்டாலும் நெல்லை உடனுக்குடன் அரிசி அரவை ஆலைக்கு அனுப்பப்பட்டு என்றுமில்லாத அளவிற்கு விரைந்து நெல் அரைக்கப்பட்டு வருகிறது. நெல் விவசாயிகளுக்கு நம் முதல்அமைச்சர் தலைமையிலான அரசு என்றும் பாதுகாவலாக இருக்கும்." இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# கோவை: வாகமலை எஸ்டேட்டில் மருத்துவமனையை சூறையாடிய யானைகள்



கோயம்புத்தூர், ஆக. 15
கோவை மாவட்டம், வால்பாறை அருகே தேயிலைஎஸ்டேட்கள் உள்ளது. அதன் அருகே மக்கள் வசிக்கும் குடியிருப்புகளும் உள்ளன. இந்த நிலையில் அருகிலுள்ள வனப் பகுதிகளிலிருந்து யானைகள் இரை, தண்ணீர் உள்ளிட்ட தேவைகள் மற்றும் பல காரணங்களால் தனியாகவோ அல்லது கூட்டமாகவோ மக்கள் வசிக்கும் குடியிருப்பு பகுதிகளுக்குள் சில நேரங்களில் புகுந்து விடுகின்றன. அந்த யானைகள் மக்கள் குடியிருப்பு பகுதிகள், அருகிலுள்ள வயல் வெளிகள் போன்றவற்றை சேதப்படுத்துகின்றன.

இதனை தொடர்ந்து, தேயிலை தோட்டம் அருகே வசிக்கும் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் யானை வலம்வரும் பாதைகள், தண்ணீர் தேடும் இடங்கள் போன்ற தகவல்கள் மூலம் யானைகளை தொடர்ந்து கண்காணித்து, அவை மக்கள்வசிக்கும் பகுதிகளுக்குள் நுழையாமல் தடுக்க நடவடிக்கைகள் எடுத்து வருவதாக வனத்துறையினர் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் நேற்று நள்ளிரவில் வால்பாறை அருகே, வாகமலை எஸ்டேட் பகுதியில் உள்ள ஒரு மருத்துவமனையை காட்டு யானைகள் சூறையாடியுள்ளது. இதனால் அந்த மருத்துவமனையில் கட்டிடங்கள் உடைந்துள்ளதோடு, பல்வேறு மருந்துகள், மருத்துவ உபகரணங்கள் உள்ளிட்டவை சிதறிக் கிடந்தன. பின்னர் இதுகுறித்து அந்த மருத்துவமனை ஊழியர்கள் கொடுத்த தகவலின் பேரில், வனத்துறை அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு வந்து பார்வையிட்டு விசாரணை நடத்தி வருகின்றனர். இச்சம்பவத்தை தொடர்ந்து அந்த மருத்துவமனை ஊழியர்கள் மற்றும் அப்பகுதி மக்கள் யானைகள் இதுபோல் மக்கள் குடியிருக்கும் பகுதிக்குள் புகுந்து அவர்களின் உடைமைகளை சேதப்படுத்துவதை தடுக்க வனத்துறை அதிகாரிகள்விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

# திருவாரூர்: பள்ளியில் காலை உணவு சாப்பிட்ட மாணவர்களுக்கு வாந்தி, மயக்கம்



திருவாரூர், ஆக. 15
திருவாரூர் மாவட்டம் வலங்கைமானை அடுத்த ஆலங்குடி பூனாயிருப்பு கிராமத்தில் அரசு ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி செயல்பட்டு வருகிறது. இங்கு 1ம் வகுப்பு முதல் 5ம்வகுப்பு வரை மாணவ, மாணவிகள் படித்து வருகின்றனர். இந்தநிலையில் இன்று காலை பள்ளியில் மாணவ, மாணவிகளுக்கு காலை உணவு வழங்கப்பட்டது. அதனை மாணவர்கள் சாப்பிட்டனர். அப்போது சில மாணவர்கள் சாம்பாரில் பல்லி இருப்பதை பார்த்ததாக கூறப்படுகிறது. இதுகுறித்து அவர்கள் ஆசிரியர்களிடம் கூறினர். இதையடுத்து காலை உணவை சாப்பிட்ட 8 மாணவர்களுக்கு வாந்தி, மயக்கம் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து அவர்களை ஆசிரியர்கள் ஆலங்குடி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அழைத்து சென்றனர். அங்கு அவர்களுக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு பின்னர் கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு மாணவர்கள் மேல்சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். இந்த சம்பவம் அந்த பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.",

# அம்பேத்கரின் தமிழாக்கங்கள் 17 தொகுதிகளை வெளியிட்டார் அமைச்சர் சாமிநாதன்



சென்னை, ஆக. 15
இரண்டாம் கட்டமாக 17 தொகுதிகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் இன்று வெளியிட்டார்.

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் தந்தையும் முற்போக்கு சமத்துவ இந்தியாவின் சிற்பியுமான அம்பேத்கர் சமூக ஏற்றத் தாழ்வுகளை நீக்கி சமத்துவ சமுதாயம் உருவாக்க பாடுபட்டவர். நம்மை முன்னேறவிடாது இறுகப் பிடித்து இன்னல்கள்பல விளைவிக்கும் சாதி எனுங்கோட்பாட்டை நீக்கிட வேண்டும் என்று சமத்துவ முரசு கொட்டியவர். சாதி, சமயங்கள், மதபேதங்கள், உயர்வு தாழ்வு இவையெல்லாம் அகற்றவும் அனைவரும் சமம் என்ற சூழ்நிலையை உருவாக்கவும் அயராது உழைத்தவர்.

அண்ணல் அம்பேத்கரின் அனைத்து படைப்புகளும் இன்றைய தமிழ் இளைஞர்கள் எளிமையாக வாசிக்கும் வகையில் புலவர் செந்தலை ந. கவுதமன், பேராசிரியர் வீ. அரசு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் பேராசிரியர் மு. வளர்மதி, கல்லூரிக் கல்வி இயக்ககத்தின் இயக்குநர் அ. மதிவாணன் ஆகியோரின் நெறியாளுகையில் அனைவரும் புரிந்துகொள்ளும் வகையில் பிறமொழிக் கலப்பின்றி அகற்றி மொழிபெயர்க்கப்பட்டு, தமிழ் வளர்ச்சித் துறை நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்துடன் இணைந்து மக்கள் பதிப்பாக அணியம் செய்யப்பட்ட முதல் 10 தொகுதிகள் தமிழ்நாடு முதல்அமைச்சரின் கரங்களால் 13.01.2025 அன்று வெளியிடப்பட்டன.

முதற்கட்டமாக வெளியிடப்பட்டஅச்சிடப்பட்ட 10 தொகுதிகளின் விற்பனை தொடங்கிய இரண்டு திங்களுக்குள் 2000 படிகள் விற்றுத் தீர்ந்தன. இதன் மூலம் பெறப்பட்ட ரூ.14,00,000/ (ரூபாய் பதினான்கு இலட்சம் மட்டும்) அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இதன் தொடர்ச்சியாக தற்போது இரண்டாம் கட்டமாக மொழிபெயர்க்கப்பட்டு அணியம் செய்யப்பட்டுள்ள தீண்டாமை 2 தொகுதிகள்; காங்கிரசும் காந்தியும் தீண்டப்படாதோருக்குச் செய்தது என்ன – 4 தொகுதிகள்; இந்து மதம், மார்க்சியம், மத மாற்றம் – 4 தொகுதிகள்; புத்தர் – அவரது தம்மம் – 3 தொகுதிகள்; பாகிஸ்தான் அல்லது இந்தியப் பிரிவினை – 4 தொகுதிகள் எனமொத்தம் 17 தொகுதிகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் இன்று (13.08.2025 – புதன்கிழமை) தலைமைச் செயலகத்தில், வெளியிட்டார்.

இந்த நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் ந.அருள், நெறியாளுகை உறுப்பினர்கள் பேராசிரியர் வீ. அரசு, அ. மதிவாணன் மற்றும் நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தைச் சேர்ந்த சோ. சண்முகநாதன், ஆ.சிவசுக்குமார், மா. சிவக்குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் பங்கேற்றனர்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தூத்துக்குடியில் கணவருடன் தகராறு: இளம்பெண் தூக்குப்போட்டு தற்கொலை

தூத்துக்குடி ஆக. 15
தூத்துக்குடி, முத்தையாபுரம் சுந்தர்நகர் 1வது தெருவைச் சேர்ந்த கருப்பசாமி மனைவி பொன்இருடி (வயது 24). இந்த தம்பதிக்கு கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடந்தது. இவர்களுக்கு 2 மகன்கள் உள்ளனர். இந்த நிலையில் நேற்று கணவன் மனைவி இடையே குடும்பத் தகராறு ஏற்பட்டுள்ளது.

இதனால் மன வேதனை அடைந்த பொன்இருடி தனது வீட்டில் பாத்ரூமில் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார். இந்த சம்பவம் குறித்து தகவல் அறிந்த முத்தையாபுரம் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் (பொறுப்பு) ஜெயந்தி சம்பவ இடத்துக்கு சென்று உடலை மீட்டு பரிசோதனைக்கு அனுப்பி வைத்தார்.

மேலும் இது சம்பந்தமாக வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்.

# நீண்ட நாட்களாக சாலையோரங்களில் விடப்பட்ட 525 வாகனங்கள் 15 நாட்களில் ஏலம் சென்னை மாநகராட்சி



சென்னை ஆக. 15
சென்னை மாநகராட்சி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சாலையோரங்களில் நீண்ட நாட்களாக பழுதடைந்து கேட்பாரற்று போக்குவரத்திற்கு இடையூறாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வாகனங்களில் 525 வாகனங்கள் அகற்றப்பட்டு, மாநகராட்சி இடங்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந்த வாகனங்களின் விவரங்கள் மாநகராட்சியின் www.chennaicorporation.gov.in என்ற இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இவ் வாகனங்களை உரிமை கோருவோர் சம்பந்தப்பட்ட வார்டு உதவிப் பொறியாளர்/மண்டல அலுவலகம் / காவல் நிலையத்தை 15 நாட்களுக்குள் அணுக வேண்டும். அவ்வாறு 15 நாட்களில் உரிமை கோரப்படாத வாகனங்களை பொது ஏலம் விட நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 2 நாள் ஜி.எஸ்.டி மற்றும் வரிவிலக்கு தாக்கல் குறித்த பயிற்சி

சென்னை ஆக. 15
தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:

தமிழக அரசின் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் (EDIITN), தொழில் முனைவோர், சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் உரிமையாளர்கள், சுயதொழிலாளர்கள் ஆகியோருக்கான வரி மற்றும் ஒழுங்கு முறை குறித்த பயிற்சியை வழங்கும் நோக்குடன், "ஜி.எஸ்.டி " மற்றும் வரிவிலக்கு தாக்கல் குறித்த பயிற்சி திட்டத்தை" அறிவிக்கிறது.

தேதி: 20.08.2025 முதல் 21.08.2025 முடிய
இடம்: EDIITN வளாகம், ஈக்காட்டுத்தாங்கல், சென்னை32

இந்த இரண்டு நாள் பயிற்சியில் பங்கேற்பாளர்கள் பின்வரும் தலைப்புகளில் விரிவான பயிற்சியை பெறுவார்கள்:
ஜி.எஸ்.டி (வரி சேவை வரி) அடிப்படை அறிமுகம் மற்றும் கட்டமைப்பு
ஜி.எஸ்.டி பதிவு செய்யும் நடைமுறை.
இன்வாய்ஸ் (விலைப் பட்டியல்) தயாரித்தல் மற்றும் தாக்கல் செயல்முறை.
உள்ளீட்டு வரிச்சலுகை (Input Tax Credit ITC) தொடர்பான விளக்கம்
ஜி.எஸ்.டி கட்டண செலுத்தும் முறை மற்றும் காலவரை முறை
ஜி.எஸ்.டி தணிக்கை மற்றும் மதிப்பீட்டு செயல்முறை
ஒழுங்குமுறை நடைமுறைகள், அபராதங்கள் மற்றும் புகார்கள்

பயிற்சியின் முக்கிய நோக்கங்கள்:
நிதி சார்ந்த திறன்களை மேம்படுத்துதல்
மத்திய மற்றும் மாநில அரசுகள் வழங்கும் நிதி உதவி திட்டங்கள், திறன் மேம்பாடு, உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் சந்தை அணுகல் போன்ற தொழில்முனைவோர் ஆதரவு நடவடிக்கைகள்குறித்து வழிகாட்டல்

பங்கேற்பதற்கான தகுதி:
வணிக அல்லது தொழில் செயற்பாடுகளை புரிந்து கொள்ளும் அடிப்படைத் திறன் அவசியம்
கணினி மற்றும் தொழில் நுட்பம் தொடர்பான முன் அறிவு தேவையில்லை.

இப்பயிற்சி பற்றிய கூடுதல் விவரங்கள் மற்றும் முன்பதிவிற்கு www.editn.in என்ற வலைத்தளத்தில் தெரிந்து கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு அலுவலக வேலை நாட்களில்(திங்கள்முதல்வெள்ளி வரை) காலை 10 மணி முதல் மாலை 5.45 மணி வரை தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி மற்றும் கைபேசி எண்கள் கொடுக்கப்பட்டுள்ளது: 9543773337/9360221280, இடம்: EDIITN வளாகம், ஈக்காட்டுத்தாங்கல், கிண்டி, சென்னை – 600 032.

அரசு சான்றிதழ் வழங்கப்படும். முன்பதிவு அவசியம்

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கன்னியாகுமரி: உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் 52,098 மனுக்கள்: கலெக்டர் தகவல்



கன்னியாகுமரி ஆக. 15
தமிழ்நாடு முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின், உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை கடந்த 15.7.2025 அன்று துவக்கி வைத்தார்.

அதைத் தொடர்ந்து இன்று கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், பத்மநாபபுரம் லெட்சுமி மஹாலில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமை மாவட்ட கலெக்டர் அழகு மீனா நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார். அதைத் தொடர்ந்து அவர் கூறியதாவது:

தமிழ்நாடு முதல்அமைச்சர் பொதுமக்களின் நலன் கருதி, அவர்களின் பகுதிகளிலேயே நேரிடையாக சென்று முகாம்கள் நடத்தி கோரிக்கை மனுக்களை பெற, உங்களுடன் ஸ்டாலின் என்ற அற்புதமான திட்டம் அக்டோபர் மாதம் 15ம் தேதி வரை நடத்திட அறிவுறுத்தியுள்ளார்கள்.

அதனடிப்படையில் இன்று கல்குளம் வட்டம், பத்மநாபபுரம் நகராட்சி வார்டு 10, 11, 12 உள்ளிட்ட பகுதி பொதுமக்களுக்கு பத்மநாபபுரம் லெட்சுமி மஹாலில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் முகாமினை நேரில் பார்வையிட்டு, பொதுமக்கள் அளிக்கும் மனுக்கள் பெற்றுக் கொள்ளப்பட்டது. பொதுமக்கள் அளிக்கும் மனுக்கள் கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டு, அவர்களுக்கு ஒப்புகை சீட்டு வழங்கப்பட்டு வருவதை நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும் முகாமிற்கு வருகை தந்த பொதுமக்களிடம் கோரிக்கைகள் கேட்டறியப்பட்டது. மனுக்கள் அளிக்க வரும் பொதுமக்களை நீண்ட நேரம் காக்க வைக்காமல் துரிதமாக கணினியில் பதிவேற்றம் செய்திட முகாம்ஒருங்கிணைப்பு அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. மேலும் நமது மாவட்டத்தில் 15.7.2025 முதல் 12.8.2025 வரை 102 முகாம்கள் நடத்தப்பட்டு 52,098 மனுக்கள் பெறப்பட்டுள்ளது. பொதுமக்கள் அனைவரும் தங்கள் பகுதிகளின் அருகாமையில் நடைபெறும் முகாம்களில் கலந்து கொண்டு பயன்பெறலாம்.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்த முகாமில் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் மோகனா, பத்மநாபபுரம் நகராட்சி தலைவர் அருள் சோபன், கல்குளம் வட்டாட்சியர் ஜாண் ஹெனி, துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# சென்னையைத் தொடர்ந்து கோவையிலும் தூய்மை பணியாளர்கள் போராட்டம்



கோவை, ஆக. 15
சென்னை மாநகராட்சி மண்டலம் 5, 6 ஆகியவற்றில் தூய்மைப் பணி தனியார் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து 300 க்கும் மேற்பட்ட தூய்மை பணியாளர்கள் கடந்த 1ந்தேதி முதல் ரிப்பன் கட்டிடம் முன்பு காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இரவு, பகல் பாராமல் அவர்கள் போராட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதனை தொடர்ந்து கோவையிலும் தூய்மை பணியாளர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

கோவை மாவட்டம் நகராட்சியில் இருக்கக்கூடிய, 27 வார்டுகளில் நூற்றுக்கும் மேற்பட்ட தூய்மை பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில், பணியாற்றி வருகின்றனர்.

இந்த நிலையில், இன்று காலை, தூய்மை பணியாளர்கள் தங்களுக்கு, ஊதிய உயர்வு, வழங்க வேண்டும் என சொல்லி, காரமடை நகராட்சிவளாகத்தில்அமர்ந்து பணிபுறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் நகராட்சி அலுவலக வளாகத்தில் பரபரப்பான சூழல் நிலவியது. இந்த போராட்டம் காரணமாக, காரமடை மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் இருக்கக்கூடிய, குப்பைகள் அகற்றப்படாமல் குவிந்திருக்கிறது. அவ்வப்போது, மழை பெய்து வரக்கூடிய சூழ்நிலையில், தேங்கும் குப்பை காரணமாக நோய்த்தொற்று பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

# கழித்து வைக்கப்பட்ட வாகனங்கள் ஏலம் சீருடை பணியாளர் தேர்வு வாரியம் அறிவிப்பு



தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வு வாரியம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவித்திருப்பதாவது: தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வு வாரியம், சென்னை – 08, அலுவலக வளாகம், எழும்பூர் சென்னை – 08 இல் உள்ளகழித்து வைக்கப்பட்ட வாகனங்கள் பொது ஏலத்தின் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளன. இவ்வேலம் 03 செப்டம்பர் 2025 அன்று காலை 10.00 மணிக்கு நடைபெறும். விதிமுறைகள் : 1. ஏலத்தில் பங்கேற்க விரும்பும் நபர்கள் ரூ.500/ (திருப்பிச் செலுத்தப்படும்) எச்சரிக்கைத் தொகையை ஏலம் தொடங்குவதற்கு முன் செலுத்த வேண்டும். 2. ஏலம் வாரியத்தின் விதிமுறைகளுக்கு இணங்க நடைபெறும். 3. வாரியத்தின் முடிவு இறுதியானதாகும். 4. ஏலத்தில் பங்கேற்பவர்கள் தங்கள் அடையாள ஆவணங்களை கொண்டு வர வேண்டும். மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள : 9498189753 / 9789035725 இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கவர்னரிடம் பட்டம் பெற மறுத்த மாணவி; திமுகவில் பெயர் வாங்க அரங்கேற்றும் நாடகம் அண்ணாமலை விமர்சனம்

சென்னை ஆக. 15

நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா இன்று நடைபெற்றது. இதில் பங்கேற்ற மாநில கவர்னரும், பல்கலைக்கழக வேந்தருமான ஆர்.என். ரவி 650 மாணவ, மாணவியருக்கு பட்டங்களை வழங்கினார். அப்போது, நாகர்கோவிலை சேர்ந்த ஆராய்ச்சி மாணவி ஜீன் ஜோசப் கவர்னர் ஆர்.என்.ரவியிடமிருந்து பட்டத்தை பெறாமல் துணை வேந்தர் சந்திரசேகரிடமிருந்து பட்டத்தை பெற்றார். இதனால் விழா மேடையில் இருந்த அனைவரையும் அதிர்ச்சியடைந்தனர். கவனர் ஆர்.என்.ரவியிடமிருந்து பட்டம் பெறுவதை மறுத்த ஆராய்ச்சி மாணவி ஜீன் ஜோசப், கவர்னர். ஆர்.என்.ரவி தமிழ்நாட்டிற்கும், தமிழர்களுக்கு எதிராக செயல்படுவதால் அவரிடமிருந்து பட்டம் பெற விரும்பவில்லை என்றார்.





இந்நிலையில், கவர்னர் கையால் பட்டம் பெற மறுத்த ஆராய்ச்சி மாணவி திமுக துணைச்செயலாளரின் மனைவி என்றும், திமுகவில் பெயர் வாங்க அவர் அரங்கேற்றும் நாடகம் என்றும் பாஜக மூத்த தலைவர் அண்ணாமலை குற்றஞ்சாட்டியுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில்,

நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில், நாகர்கோவில் மாநகர திமுக துணைச்செயலாளர் ராஜன் என்ற நபரின் மனைவி ஜீன் ஜோசப் என்பவர், கவர்னர் கையால் பட்டம் பெற மாட்டேன் எனக் கூறியிருக்கிறார்.

காலகாலமாக, கட்சியில் பெயர் வாங்க, திமுகவினர் அரங்கேற்றி வரும் தரங்கெட்ட நாடகங்களுக்கு, கல்வி நிலையங்களையும் பயன்படுத்தி வருவது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

திமுகவின் கீழ்த்தரமான அரசியலை எல்லாம், கல்வி நிலையங்களில் வைத்துக் கொள்ளக் கூடாது என, தனது கட்சியினருக்கு, முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்த வேண்டும்.

திமுகவை பிடிக்காத மக்களே தமிழகத்தில் அதிகம். அவர்களும் இதே போன்று நடந்து கொண்டால், முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது முகத்தை எங்கே கொண்டு வைத்துக் கொள்வார்?

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# ஆபரேஷன் சிந்தூரை விளம்பர வெறிக்காக பயன்படுத்தி வரும் மத்திய அரசு: சு.வெங்கடேசன் எம்.பி.



சென்னை ஆக. 15

மதுரை எம்.பி.யான சு.வெங்கடேசன் தனது எக்ஸ் வலைதளத்தில் வெளியிட்டுள்ள செய்தியில் கூறியதாவது,

பஹல்காம் தாக்குதல் மற்றும் ஆபரேஷன் சிந்தூர் குறித்து விவாதிக்க நாடாளு மன்றத்தின் சிறப்புக் கூட்டத் தொடரை கூட்டச் சொன்னோம். அரசு அதனை செய்யவில்லை. வழக்கம்போல் கூடுகிற மழைக்கால கூட்டத்தொடரிலும் விவாதப் பொருளில் அது சேர்க்கப்படவில்லை. எதிர்க்கட்சிகளின் தீவிரமான போராட்டத்திற்கு பின்பே "பஹல்காம் தீவிரவாத தாக்குதல்ஆபரேஷன் சிந்தூர்" குறித்து விவாதம் நடத்த அரசு ஏற்றுக்கொண்டது. அந்த விவாதத்தில் கூட ஆபரேஷன் சிந்தூர் பற்றி மட்டுமே அமைச்சர்கள் பேசினார்கள். பஹல்காம் தாக்குதல், அதில் உயிரிழந்தவர்கள், பாகிஸ்தான் தாக்குதலில் பாதிக்கப்பட்ட எல்லையோர மக்கள் குறித்து பா.ஜ.க.அரசு ஒருவார்த்தை பேசவில்லை. இந்திய ராணுவத்தை எப்படிப் பயன்படுத்தியிருக்க வேண்டுமோ அப்படிப் பயன்படுத்தவில்லை என்று நாங்கள் குற்றம்சாட்டினோம். தாக்குதலை முடிவுக்கு கொண்டு வருவதாக அமெரிக்க அதிபர் அறிவித்ததைப் பற்றி கேள்வி எழுப்பினோம். ஆனால் அது பற்றி எந்த பதிலும் சொல்லவில்லை. பாகிஸ்தானுக்குள் 100 கிலோமீட்டர் நுழைந்து தாக்குதல் தொடுக்கப்பட்டதாக சொன்னது அரசு.

அது சார்ந்த அரசியல் கேள்விகளுக்கு பதில் சொல்ல பிரதமரால் மாநிலங்களவைக்கு வந்து சேர முடியவில்லை. தொடர்ந்து ஆபரேஷன் சிந்தூரைத் தனது விளம்பர வெறிக்காக மட்டுமே பயன்படுத்தி வரும் அரசு, இன்று மேலும் ஒரு படி கீழிறங்கி மூத்த ராணுவ அதிகாரிகளை பொழுதுபோக்கு நிகழ்ச்சியில் கொண்டு வந்து அமர்த்தியுள்ளது. எப்படித் தாக்குதல் நடந்தது? தீவிரவாதிகளுக்கு உதவியவர்கள் யார்? எத்தனை பேரைக் கைது செய்தீர்கள்? பாதுகாப்புக் குறைபாடுகளுக்கு யார் பொறுப்பு? என நாங்கள் எழுப்பிய கேள்விகளுக்கு இன்று வரை பா.ஜ.க.வால் பதிலளிக்க முடியவில்லை என பதிவிட்டுள்ளார்.

# சுதந்திர தினத்தன்று மதுபானம் விற்றால் கடும் நடவடிக்கை: சென்னை கலெக்டர் எச்சரிக்கை



சென்னை ஆக. 15

சென்னை மாவட்ட கலெக்டர் ரஷ்மி சித்தார்த் ஜகடே வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

வருகின்ற 15.8.2025, வெள்ளிக்கிழமை அன்று சுதந்திர தினத்தை முன்னிட்டு தமிழ்நாடு மதுபான சில்லறை விற்பனை (கடைகள் மற்றும் பார்கள்) விதிகள் 2003, விதி 12 மற்றும் தமிழ்நாடு மதுபானம் (உரிமம் மற்றும் அனுமதி) விதிகள் 1981 விதி 2511(a) ஆகியவைகளின் கீழ் சென்னை மாவட்டத்தில் உள்ள அனைத்து டாஸ்மாக் (FL1) மதுபான சில்லறை விற்பனை கடைகள் மற்றும் அதனைச் சார்ந்த பார்கள், FL2 உரிமம் கொண்ட கிளப்புகளைச் சார்ந்த பார்கள், FL3 உரிமம் கொண்ட ஹோட்டல்களைச் சார்ந்த பார்கள் மற்றும் FL3(A)/FL3(AA) முதல் FL11 வரை உரிமம் கொண்ட மதுபான விற்பனையங்கள் / மதுபான கூடங்கள் அனைத்தும் கண்டிப்பாக மூடப்பட்டு 15.8.2025 (வெள்ளிக்கிழமை) அன்று சுதந்திர தினத்தில் மதுபானம் விற்பனை செய்யக்கூடாது என இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது. தவறினால் மதுபானம் விற்பனை விதிகளின்படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# தமிழக, கேரள எல்லையில் மாவோயிஸ்டுகள் நடமாட்டமா? தீவிர வாகன சோதனை



காரமடை, ஆக. 15

நாடு முழுவதும் நாளை மறுநாள் (வெள்ளிக்கிழமை) சுதந்திர தினம் கொண்டாடப்படுகிறது. இதையொட்டி கோவை காரமடை அருகே தமிழக கேரள எல்லையில் உள்ள கோபனாரியில் போலீசார் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டனர். இதுகுறித்து போலீசார் கூறுகையில், அத்திக்கடவு, பில்லூர், மேல்பாவி, குண்டூர், ஆலங்கண்டி, ஆலங்கட்டிபுதூர், காலன்புதூர், செங்குட்டை, குட்டைபுதூர், பட்டிசாலை உள்ளிட்ட பல்வேறு பழங்குடியின கிராமங்களில் மாவோயிஸ்டுகள், ஐ.எஸ். ஆதரவாளர்கள் நடமாட்டம் உள்ளதா என போலீசார் மற்றும் வனத்துறையினர் தீவிர சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர். அந்நியர்கள் நடமாட்டம் இருந்தால் உடனடியாக போலீசார், வனத்துறையினர் தெரிவிக்க வேண்டும் என்று விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதுதவிர கோபனாரி சோதனை சாவடியில் வாகன தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது. சுதந்திரதின பாதுகாப்பு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக இந்த சோதனை நடத்தப்படுகிறது என்று தெரிவித்தனர்.

# வேலூர் கோட்டையில் நடைபயிற்சியில் ஈடுபட்டிருந்த போலீஸ்காரர் மயங்கி விழுந்து சாவு



வேலூர் ஆக. 15

வேலூர் கோட்டையில் நடைபயிற்சி செய்துகொண்டிருந்த போலீஸ்காரர் திடீரென நெஞ்சுவலி ஏற்பட்டு உயிரிழந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

வேலூரைச் சேர்ந்த ஜெயசீலன் என்பவர் 15வது பட்டாலியன் அலுவலக கண்காணிப்பாளராக (அமைச்சுப்பணி) பணியாற்றி வந்தார். இந்த நிலையில் ஜெயசீலன் வேலூர் கோட்டையில் நடைபயிற்சியில் ஈடுபட்டிருந்தார்.

அப்போது அவருக்கு திடீரென நெஞ்சுவலி ஏற்பட்டு மயங்கி விழுந்தார். உடனடியாக அவரை மீட்ட அக்கம்பக்கத்தினர் அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்தனர். ஜெயசீலனை பரிசோதித்த டாக்டர்கள் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக அறிவித்தனர். இந்த சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்த போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# மயங்கி விழுந்து இறந்த மகன்.. உடலை பார்த்து கதறிய தாய்.. அடுத்து நிகழ்ந்த சோகம்



மதுரை ஆக. 15

மதுரை அருகே அவனியாபுரம் புரசடி 1வது தெருவை சேர்ந்தவர் குமரவேல் (வயது 51). தனியார் நிறுவனத்தில் ஊழியராக வேலைபார்த்து வந்தார். இவருடைய மனைவி ராஜதிலகா. இவர்களுக்கு 2 மகன்கள். நேற்றுமுன்தினம் வீட்டில் இருந்தபோது திடீரென குமரவேல் மயங்கி விழுந்தார். அவரை ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர்.

அங்கு பரிசோதனை செய்த டாக்டர், ஏற்கனவே குமரவேல் இறந்துவிட்டதாக கூறினர். அவரது உடல் அஞ்சலிக்காக வீட்டில் வைக்கப்பட்டு இருந்தது. குமரவேலின் தாயார் கோவிந்தம்மாள் (80). மகனின் உடலை பார்த்து கதறி அழுதார்.

சோகம் தாங்காமல் கோவிந்தம்மாள் திடீரென தனது மகனின் உடல் மீது மயங்கி விழுந்து உயிரைவிட்டார். இதை பார்த்து அவரது குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் சோகம் அடைந்து அழுதனர். இதனையடுத்து தாய், மகன் உடல்கள் அருகருகே அஞ்சலிக்காக வைக்கப்பட்டன. தொடர்ந்து 2 பேரின் உடல்களும் அடக்கம் செய்யப்பட்டன.

# ஜப்பானிய மூளைக் காய்ச்சல் தடுப்பூசி திட்டம் 7 மாவட்டங்களுக்கு விரிவாக்கம்





சென்னை, ஆக. 15

2025,26 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பின்படி, ஜப்பானிய மூளைக் காய்ச்சல் தடுப்பூசி திட்டம் 7 மாவட்டங்களுக்கு விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. இந்த திட்டத்தை சென்னை, சைனாய்நகர், பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் இருந்து மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் இன்று தொடங்கி வைத்தார்.

அதன்பின்னர் செய்தியாளர்கள் சந்திப்பில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறியதாவது:

தமிழ்நாட்டில் மூளைக் காய்ச்சல் தடுப்பூசி திட்டம் என்பது, கலைஞர் கருணாநிதி முதல்அமைச்சராக இருந்தபோது 2007ம் ஆண்டு விருதுநகர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருச்சி, திருவாரூர், மதுரை, பெரம்பலூர், அரியலூர், தஞ்சாவூர், திருவண்ணாமலை, திருவள்ளூர், புதுக்கோட்டை மற்றும் கரூர் ஆகிய 15 மாவட்டங்களில் சென்னையில் இரண்டு மண்டலங்களில் என்று 2007ம் ஆண்டு தொடங்கப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது.

இந்த வகையில் நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக இருக்கின்ற குழந்தைகளை அதிகம் பாதிக்கின்ற இந்த நோய்க்கான மூளைக்காய்ச்சல் தடுப்பூசி திட்டம் விரிவாக்கம் செய்யப்படும் என்று கடந்தாண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிப்பு எண்.109ன்படி அறிவிக்கப்பட்டது. அதன்படி இன்று சென்னையில் ஏற்கனவே பயன்பாட்டில் இருக்கின்ற 2 மண்டலங்கள் தவிர்த்து மீதமிருக்கின்ற 13 மண்டலங்களிலும், புதிதாக 7 மாவட்டங்கள் என்கின்ற வகையில் செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருநெல்வேலி, தென்காசி, நாகப்பட்டினம் மற்றும் வேலூர் ஆகிய 7 மாவட்டங்களிலும் இந்த திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டு இன்று தொடங்கப்பட்டுள்ளது.

தடுப்பூசி திட்டங்களை பொறுத்தவரை 1978ம் ஆண்டு 6 நோய்களை கட்டுப்படுத்துவதற்கு ஒரு விரிவான தடுப்பூசி திட்டம் தமிழ்நாட்டில் தொடங்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக 1985ம் ஆண்டு நாடு தழுவிய தடுப்பூசி திட்டமாக அது வலுப்படுத்தப்பட்டது. நாடு தழுவிய தடுப்பூசி திட்டத்தில் தமிழ்நாட்டை பொறுத்தவரை காசநோய், தொண்டை அடைப்பான், கக்குவான் இருமல், மஞ்சள்காமாலை, எச்.இன்புளுயன்சா, நிமோனியா மற்றும் மினிஞ்சிடிஸ், ரண ஜன்னி, போலியோ, தட்டம்மை, ரூபெல்லா, ரோட்டா வைரஸ் வயிற்று போக்கு, நியூமோகோக்கல் நிமோனியா, மற்றும் ஜப்பானிய மூளைக்காய்ச்சல் என்று பல்வேறு வகைகளிலான இந்த நோய் பாதிப்புகளுக்கு தடுப்பூசிகள் போடப்பட்டு வருகிறது.

அந்த வகையில் 12 வகையான நோய் பாதிப்புகளை தடுப்பதற்கு இன்று 11 வகையான தடுப்பூசிகள் தமிழ்நாட்டில் தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகிறது. இந்த மூளைக்காய்ச்சல் என்று சொல்லப்படுகிற ஜப்பானிய மூளைக்காய்ச்சல் சில வகையான கியூலெக்ஸ் கொசுக்களால் பரவும் ஒரு வைரஸ் நோயாகும். இந்த நோய் மத்திய நரம்பு மண்டலத்தை பாதிப்பு செய்து கடுமையான சிக்கல்களை, வலி பாதிப்புகளை உண்டாக்குகிறது. அது மட்டுமல்லாது மரணத்தையும் ஏற்படுத்துகிறது.

இந்த நோயினால் இறப்பு விகிதம் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் இதை அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்துவதற்குரிய நடவடிக்கை முதல்அமைச்சரின் வழிகாட்டுதலோடு செய்யப்பட்டு வருகிறது. இந்த நோய் பாதிப்பிலிருந்து உயிர் பிழைத்தவர்கள்கூட அதிக அளவில் நரம்பியல் விளைவுகளால் பாதிக்கப்படுகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே, இயற்கை தொற்று காரணமாக எதிர்ப்பு சக்தி இல்லாத குழந்தைகளை கண்டறிந்து அவர்கள் அதிகம் இருக்கின்ற மாவட்டங்களில் இந்த தடுப்பூசிகள் போடுவது என்பது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

ஜப்பானிய மூளைக்காய்ச்சல் தடுப்பூசி ஒருமுறை முகாம்களாக "One Time Campaign" அதிக ஆபத்துள்ள மாவட்டங்களில் 1 முதல் 15 வயதுள்ள குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது. இன்று தொடங்கப்பட்டிருக்கும் இத்திட்டத்தை பொறுத்தவரை 1 முதல் 15 வரையிலான 27,63,152 குழந்தைகளுக்கு இந்த மூளைக்காய்ச்சல் தடுப்பூசி ஒரு டோஸ் போட நடைவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாவட்ட சுகாதார அலுவலர்கள், மாவட்ட தாய் சேய் நல அலுவலர்கள் ஆகியோரின் மேற்பார்வையில் கிராம, நகர சுகாதார செவிலியர்கள் மற்றும் தேவைப்படுகின்ற இடங்களில் இடைநிலை சுகாதார செவிலியர்கள் முதலானோர் அவர்களால் இந்த தடுப்பூசி திட்டம் இன்று தொடங்கப்பட்டு செயல்பாட்டுக்கு வந்துள்ளது. 1 முதல் 15 வயது வரையிலான மொத்தம் 27,63,152 குழந்தைகளுக்கு ஜப்பானிய மூளைக்காய்ச்சல் தடுப்பூசி ஒரு டோஸ் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த முகாம் மூன்று அணுகுமுறைகளில் செயல்படுத்தப்படும்.

பள்ளி தடுப்பூசி முகாம்:

515 வயதுடைய குழந்தைகளுக்கு அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஆகஸ்ட் 13, 2025 முதல் செப்டம்பர் 12, 2025 வரை திங்கள், வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் அதிகபட்சமாக 12 நாட்களுக்கு தடுப்பூசி முகாம் நடைபெறும். அதைத் தொடர்ந்து விடுபட்ட குழந்தைகளுக்கு ஒரு வாரம் தடுப்பூசி போடப்படும்.

அங்கன்வாடி தடுப்பூசி முகாம்:

15 வயதுக்குட்பட்ட குழந்தைகள் மற்றும் பள்ளியிலிருந்து இடைநிற்றலான குழந்தைகளுக்கும் அனைத்து அங்கன்வாடி மையங்களிலும் தடுப்பூசி முகாம் செப்டம்பர் 13, 2025 முதல் அக்டோபர் 12, 2025 வரை திங்கள், வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் அதிகபட்சமாக 12 நாட்களுக்கு நடைபெறும். அதைத் தொடர்ந்து விடுபட்ட குழந்தைகளுக்கு ஒரு வாரம் தடுப்பூசி போடப்படும்.

ஆதரவற்ற குழந்தைகள் காப்பகம் மற்றும் சிறுவர்சீர் திருத்த பள்ளிகளில் தடுப்பூசி முகாம்:

அனைத்து ஆதரவற்ற குழந்தைகள் காப்பகம் மற்றும் சிறுவர்சீர்திருத்த பள்ளிகளில் 115 வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் அக்டோபர் 13, 2025 முதல் நவம்பர் 12, 2025 வரை திங்கள், வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் அதிகபட்சமாக 12 நாட்களுக்கு முகாம் நடைபெறும். அதைத் தொடர்ந்து விடுபட்ட குழந்தைகளுக்கு ஒரு வாரம் தடுப்பூசி போடப்படும்.

எனவே மூளைக்காய்ச்சல் நோய் தீவிரத்தை கருத்தில் கொண்டு அனைத்து பெற்றோர்களும், பாதுகாவலரும், பள்ளி அதிகாரிகளும், சமுக ஆர்வலர்களும் களசுகாதாரப்பணியாளர்களுக்கு முழு ஒத்துழைப்பு தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம். முகாமில் தகுதியுள்ள அனைத்து குழந்தைகளுக்கும் இந்த தடுப்பூசி என்பது இலவசமாக போடப்படுகிறது.

இந்த தடுப்பூசி 1 முதல் 15 வயது உள்ள குழந்தைகளுக்கு ஏற்கனவே சொன்னது போல 20 லட்சம் மேற்பட்ட குழந்தைகளுக்கு இத்தடுப்பூசி அனைவருக்கும் போடப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்தப்பட்டு 27,63,152 குழந்தைகளுக்கு தடுப்பூசி செலுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. அனைத்து குழந்தைகளுக்கும் தடுப்பூசி போடுவதற்கு சம்மந்தப்பட்டவர்கள் உறுதுணையாக இருக்க வேண்டும், ஒத்துழைப்பை நல்க வேண்டும் என்பதை கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

# கள்ளக்காதலை கண்டித்ததால் மனைவி இறந்ததாக உறவினர்களை வரவழைத்த முன்னாள் ராணுவ வீரர்

குமரி, ஆக. 15

கன்னியாகுமரி மாவட்டம் சுசீந்திரம் அருகே உள்ள புத்தளம் பகுதியை சேர்ந்தவர் 43 வயதுடைய முன்னாள் ராணுவ வீரர். இவர் பணி ஓய்வு பெற்ற பின்பு நாகர்கோவிலில் ஓட்டல் நடத்தி வந்தார். இந்த ஓட்டலில் பூதப்பாண்டி அருகே உள்ள நாவல்காடு பகுதியை சேர்ந்த ஒரு பெண் வேலை பார்த்து வந்துள்ளார். இவர்கள் இருவரும் நெருக்கமாக பழகியதாக கூறப்படுகிறது. அத்துடன் முன்னாள் ராணுவ வீரர் தனது மனைவியை கொடுமைப்படுத்தி வந்தார்.


இதனிடையே தொழிலில் நஷ்டம் ஏற்பட்டதால் ஓட்டலை மூடினர். பின்னர் மனைவிக்கு சொந்தமான நிலத்தை ஈடு வைத்து பணம் பெற்றுள்ளார். ஆனால் எந்த தொழிலிலும் முறையாக ஈடுபடவில்லை. இதனால் கணவன்மனைவி இடையே குடும்ப தகராறு ஏற்பட்டது. இதற்கிடையே மனைவியின் செல்போன் பழுதானதால் அவர் தனது சிம்கார்டை கணவரின் செல்போனில் பொருத்தி பயன்படுத்தியுள்ளார்.

அந்த செல்போனில் முன்னாள் ராணுவ வீரர், ஓட்டலில் வேலை பார்த்த பெண்ணுடன் நெருக்கமாக இருந்த புகைப்படங்கள் இருந்தன. அவற்றை பார்த்து அதிர்ச்சி அடைந்த மனைவி கணவரை கண்டித்தார். இதனால் ஆத்திரமடைந்த கணவர், மனைவி இறந்துவிட்டதாக உறவினர்களுக்கு செல்போன் மூலம் தெரிவித்தார். இதை கேட்டு அதிர்ச்சி அடைந்த உறவினர்கள் பதறியடித்து கொண்டு விரைந்து வந்தனர். அப்போது தவறான தகவல் என்பதை அறிந்து கணவரை கண்டித்தனர்.

இதுகுறித்து மனைவி சுசீந்திரம் போலீஸ் நிலையத்தில் கணவர் மீது புகார் அளித்தார். அத்துடன் கணவரை பிரிந்து தாயார் வீட்டிற்கு சென்றார். அதன் பின்பு மனைவியின் கல்வி சான்றிதழ், ஆதார் அட்டை உள்ளிட்ட ஆவணங்களை முன்னாள் ராணுவ வீரர் கொடுக்க மறுத்ததாக கூறப்படுகிறது. இது தொடர்பாக மனைவி கன்னியாகுமரி அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார்.

அந்த புகாரின் பேரில் இன்ஸ்பெக்டர் சத்தியபாமா வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார். கள்ளக்காதலை கண்டித்ததால் மனைவி இறந்ததாக உறவினர்களை முன்னாள் ராணுவ வீரர் வரவழைத்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# வகுப்பறையில் மயங்கி விழுந்த மாணவன்.. அடுத்து நடந்த நெஞ்சை உலுக்கிய சம்பவம்





விழுப்புரம் ஆக. 15

விழுப்புரம் மாவட்டத்தில் திரு.வி.க.வீதியில் தனியார் பள்ளி ஒன்று செயல்பட்டு வருகிறது. இந்த பள்ளியில் விழுப்புரம் நகரப் பகுதியான விராட்டிக் குப்பத்தைச் சேர்ந்த மகேஸ்வரியின் மகன் மோகன்ராஜ் (17) பிளஸ் 1 படித்து வருகிறார். இந்த நிலையில், மாணவர் மோகன்ராஜ் இன்று வழக்கம் போல பள்ளிக்கு புறப்பட்டு சென்றார்.

அங்கு, பள்ளியில் காலை 7 மணி அளவில் நடைபெற்ற சிறப்பு வகுப்பில் கலந்து கொண்டார். அப்போது, பள்ளி வகுப்பறையில் அமர்ந்திருந்த மாணவர் மோகன்ராஜ் திடீரென வலிப்பு ஏற்பட்டு மயங்கி விழுந்ததாக கூறப்படுகிறது. உடனே, சக மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் அந்த மாணவரை மீட்டு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர்.

அங்கு, மாணவர் மோகன்ராஜை பரிசோதித்த மருத்துவர்கள், அந்த மாணவருக்கு மூச்சு திணறல் இருப்பதாகவும், இங்கு ஆக்ஸிஜன் பற்றாக்குறை இருப்பதால், உடனே மாவட்ட அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லுமாறு கூறினர். அங்கிருந்து, அரசு மருத்துவமனைக்கு மாணவரை கொண்டு சென்றனர்.

அங்கு, மாணவரை பரிசோதித்த மருத்துவர்கள் மோகன்ராஜ் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக தெரிவித்தனர். இது தொடர்பாக, விழுப்புரம் தாலுகா போலீசார் வழக்குப் பதிந்து விசாரித்து வருகின்றனர். இந்த சம்பவத்தையடுத்து அந்த தனியார் பள்ளிக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

மேலும், பள்ளி வகுப்பறையில் மாணவர் மயங்கி விழுந்த சம்பவம் வகுப்பறையில் இருந்த கண்காணிப்பு கேமராவில் பதிவாகிஉள்ளது. அந்தவீடியோ தற்போது சமூக வலைதளங்களில் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இது தொடர்பாக விழுப்புரம் தாலுகா போலீசார் மாணவர் மோகன்ராஜின் தாய் மகேஸ்வரிடம் விசாரணை மேற்கொண்டனர்.

அப்போது, மாணவர் மோகன்ராஜ்க்கு ஏற்கனவே உடல் உபாதை இருந்ததாக கூறப்படுகிறது. இந்த சம்பவத்தை தொடர்ந்து பள்ளி வளாகத்தில் சுமார் 50 க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பாக பள்ளி தாளாளர் கூறுகையில், "மாணவன் உயிரிழந்த சம்பவம் வேதனை அளிக்கிறது. வழக்கம் போல் பள்ளிக்கு வந்த மாணவன் திடீரென மயங்கினார். உடனடியாக மாணவனை மீட்டு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம்" என்று அவர் கூறினார்.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

15.8.2025

# தூய்மை பணியாளர்களை சந்திக்க விடாமல் தமிழிசை சௌந்தரராஜன் தடுத்து நிறுத்தம்: நயினார் நாகேந்திரன் கண்டனம்



சென்னை, ஆக. 15

12 நாட்களாக போராடி வரும் தூய்மை பணியாளர்களை முன்னாள் ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன் இன்று மாலை சந்திக்க இருந்த நிலையில், அவர் வீட்டிலேயே தடுத்து நிறுத்தப்பட்டார். இதனை கண்டித்து தமிழக பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன் அறிக்கை வெளியிட்டு உள்ளார்.

அதில், தி.மு.க.வின் தேர்தல் வாக்குறுதி எண் 285ன் படி பணி நிரந்தரம், ஊதிய உயர்வு உள்ளிட்ட பல கோரிக்கைகளை நிறைவேற்ற கோரி சென்னையில் கடந்த 12 நாட்களாக போராடி வரும் தூய்மை பணியாளர்களை இன்று மாலை சந்திக்கவிருந்த தமிழக பா.ஜ.க.வின் மூத்த தலைவரும், முன்னாள் ஆளுநருமான சகோதரி @DrTamilisai4BJP அவர்களை வீட்டிலேயேதடுத்துநிறுத்த முயன்ற @arivalayam அரசின் அடக்குமுறை வன்மையாக கண்டிக்கத்தக்கது. பொதுமக்களின் நலனுக்காக போராடும் அரசியல் கட்சி தலைவர்களை தி.மு.க. அரசு ஒடுக்க நினைப்பது ஜனநாயக படுகொலை!

தூய்மை பணியாளர்களின் துயரங்களுக்கு செவி மடுக்காத தி.மு.க. அரசுக்கு, அவர்களுக்கு ஆதரவு கரம் நீட்டுவோர்களை தடுப்பதற்கு மட்டும் என்ன உரிமை இருக்கிறது? தமிழகத்தில் தங்களின் உரிமைகளை கேட்டு போராடுபவர்களையும் அவர்களுக்கு ஆதரவு அளிப்பவர்களையும் கைது செய்து, ஜனநாயக குரல்வளையை நெரிக்கும் விடியா அரசுக்கு கூடிய விரைவில் முடிவு கட்டப்படும்! என தெரிவித்து உள்ளார்.

# 'இறுதிமூச்சு உள்ளவரை அ.தி.மு.க. தான்' முன்னாள் அமைச்சர் தங்கமணி



சென்னை, ஆக. 15

முன்னாள் அமைச்சரும், குமாரபாளையம் தொகுதி எம்.எல்.ஏ.வுமான தங்கமணி, அ.தி.மு.க.வில் இருந்து விலகி தி.மு.க.வில் இணையப்போவதாக தகவல் பரவிய நிலையில், அந்த தகவலை அவர் மறுப்பு தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது;

"11.8.2025 காலை 6.00 மணிக்கு அறுவை சிகிச்சை என்ற போதும், ஓய்வு எடுக்காமல் கடந்த 9.8.2025, 10.8.2025 ஆகிய தேதிகளில் திருச்சியில் முகாமிட்டு அண்ணன் எடப்பாடியார் சுற்றுபயணம் வெற்றிகரமாக முடிக்க வேண்டும் என்று கட்சிப்பணியாற்றியவனை பற்றி இப்படி ஒரு செய்தி வந்ததை எண்ணி மிகவும் மனவேதனைப்படுகிறேன்.

எனது இறுதி மூச்சு உள்ளவரை அ.இ.அ.தி.மு.க. இயக்கம் தான் என் உயிர் மூச்சு. மூச்சு நின்றதற்கு பிறகு எனது உடலில் அ.இ.அ.தி.மு.க. கொடி போர்த்தி தான் இருக்கும் என்பதையும், இது யாரோ சில அரசியல் எதிரிகளின் தவறான தகவல் தெரிவித்ததை செய்தியாக போட்டுள்ளீர்கள். இதை முழுமையாக மறுக்கிறேன்."

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் (15.8.2025)

**மேஷம்:** புதிய வாய்ப்புகள் கிடைக்கும் நாள். வேலையில் பாராட்டுகள் வரும். குடும்பத்தில் மகிழ்ச்சி சூழும்.

**ரிஷபம்:** நிதி தொடர்பான திட்டங்கள் வெற்றி பெறும். பழைய நண்பர்களை சந்திக்கும் வாய்ப்பு.

**மிதுனம்:** உழைப்புக்குதகுந்தபலன் கிடைக்கும். ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கடகம்:** உறவினர் உதவியால் சிக்கல் தீரும். மனதில் இருந்த கவலை நீங்கும்.

**சிம்மம்:** தொழிலில் முன்னேற்றம். புதிய தொடர்புகள் மூலம் லாபம்.

**கன்னி:** பணவரவு அதிகரிக்கும். வீடு/வாகனம் குறித்த சிந்தனை உருவாகும்.

**துலாம்:** முக்கிய வேலைகள் எளிதில் நிறைவேறும். பயணங்கள் பலன் தரும்.

**விருச்சிகம்:** மன உறுதி அதிகரிக்கும். பழையகடன்பிரச்சினைகள் குறையும்.

**தனுசு:** கல்வி/பரிட்சையில் சிறப்பு வெற்றி. நண்பர்களுடன் மகிழ்ச்சி நேரம்.

**மகரம்:** உடல் நலம் மேம்படும். குடும்பத்தில் ஒற்றுமை வளரும்.

**கும்பம்:** தொழிலில்சின்னசிக்கல்கள் இருந்தாலும் தீர்வு கிடைக்கும். அமைதி பேணுங்கள்.

**மீனம்:** உழைப்புக்கு எதிர்பாராத பரிசு/பாராட்டு. மனநிறைவு கிடைக்கும்.

# நெல்லை ஆணவக்கொலை வழக்கு; கைதான சுர்ஜித் மற்றும் தந்தைக்கு நீதிமன்றக் காவல் நீட்டிப்பு



நெல்லை, ஆக. 15

நெல்லை பாளையங்கோட்டை கே.டி.சி.நகர் பகுதியை சேர்ந்தவர் சரவணன். இவரது மனைவி கிருஷ்ணவேனி. இந்த தம்பதிக்கு சுர்ஜித் (வயது 24) என்ற மகனும், சுபாஷினி என்ற மகளும் உள்ளனர். சரவணனும், கிருஷ்ணகு மாரியும் மணிமுத்தாறு பட்டாலியன் போலீசில் சப் இன்ஸ்பெக்டர்களாக பணிபுரிந்து வருகின்றனர்.

இதற்கு முன்சரவணனின் குடும்பத்தினர் தூத்துக்குடியில் வசித்து வந்தபோது, அவரது மகள் படித்த பள்ளிக்கூடத்தில் ஏரல் அருகே உள்ள ஆறுமுகமங்கலம் பகுதியை சேர்ந்த விவசாயி சந்திரசேகர் மகன் கவின்குமார் (வயது 26) படித்துள்ளார். அப்போது, கவின்குமாருக்கும், சுபாஷினிக்கும் இடையே பழக்கம் ஏற்பட்டு இருவரும் காதலித்து வந்தனர். பள்ளி, கல்லூரி படிப்பை முடித்த கவின்குமார் சென்னையில் ஐ.டி. நிறுவனத்தில் பணியாற்றி வந்தார்.

இந்நிலையில், கடந்த 27ந்தேதி கவின்குமாரின் தாத்தாவுக்கு உடல்நலம் பாதிக்கப்பட்டது. எனவே, கவின்குமார் மற்றும் அவரது குடும்பத்தினர் தாத்தாவை அழைத்துக் கொண்டு பாளையங்கோட்டையில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றனர். இதனை அறிந்து அங்கு சென்ற சுபாஷினியின் தம்பி சுர்ஜித், மருத்துவமனையில் இருந்து வெளியே வந்த கவினை தனியாக அழைத்துச் சென்று, தான் மறைத்து வைத்திருந்த அரிவாளால் கவின்குமாரை சரமாரியாக வெட்டிவிட்டு தப்பி ஓடினார். இதில் படுகாயம் அடைந்த கவின்குமார் சம்பவ இடத்திலேயே ரத்த வெள்ளத்தில் துடி துடித்து உயிரிழந்தார்.

தமிழகத்தையே உலுக்கிய இந்த ஆணவக் கொலை சம்பவம் தொடர்பாக சுர்ஜித் கைது செய்யப்பட்டார். தொடர்ந்து அவரது தந்தை சரவணனையும் போலீசார் கைது செய்தனர். இதனிடையே, இந்த வழக்கின் விசாரணை கடந்த மாதம் 30ந்தேதி சி.பி.சி.ஐ.டி.க்கு மாற்றப்பட்டது. இதையடுத்து, கொலை வழக்கு தொடர்பாக கைது செய்யப்பட்ட சுர்ஜித், அவரது த ந்தை சரவணன் ஆகியோரை சி.பி.சி.ஐ.டி. போலீசார் காவலில் எடுத்து விசாரித்தனர்.

இந்த நிலையில், 2 நாட்கள் சி.பி.சி.ஐ.டி. விசாரணைக்காவல்முடிவடைந்த நிலையில், இருவரும் இன்று நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டனர். இதையடுத்து இருவருக்கும் வரும் 26ந்தேதி வரை நீதிமன்றக் காவலை நீட்டித்து நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

# தூத்துக்குடி: போக்சோ வழக்கில் வாலிபருக்கு 10 ஆண்டுகள் சிறை



தூத்துக்குடி ஆக. 15

தூத்துக்குடி மாவட்டம், புதியம்புத்தூர் பகுதியில் கடந்த 2020ம் ஆண்டு 17 வயது சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்த வழக்கில் புதியம்புத்தூர் பகுதியைச் சேர்ந்த நாகராஜ் மகன் மாயகிருஷ்ணன் (வயது 25) என்பவரை புதியம்புத்தூர் காவல் நிலையபோலீசார்போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து கைது செய்தனர்.

இந்த வழக்கின் விசாரணை தூத்துக்குடி மகிளா நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இவ்வழக்கை விசாரித்த நீதிபதி முருகன் இன்று (13.8.2025) மாயகிருஷ்ணனுக்கு 10 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனை, ரூ.3,000 அபராதம் விதித்ததோடு, பாதிக்கப்பட்ட சிறுமிக்கு அரசு நிவாரண நிதியிலிருந்து ரூ.1 லட்சம் வழங்கவும் உத்தரவிட்டு தீர்ப்பு வழங்கினார்.

இந்தவழக்கைசிறப்பாகபுலனாய்வுசெய்தஅப்போதைய புதுக்கோட்டை காவல் நிலைய இன்ஸ்பெக்டர் விமலா, குற்றவாளிக்கு தண்டனை பெற்றுதர நீதிமன்றத்தில் திறம்பட வாதிட்ட அரசு தரப்பு வழக்கறிஞர் எல்லம்மாள் ஆகியோரை தூத்துக்குடி மாவட்ட எஸ்.பி. ஆல்பர்ட் ஜான் பாராட்டினார்.

# ஜனநாயகக் குரல்வளையை நெரிக்கும் திமுக அரசு: நயினார் நாகேந்திரன் கண்டனம்



சென்னை ஆக. 15

தமிழக பாஜக தலைவர் நயினார்நாகேந்திரன்வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

திமுகவின் தேர்தல் வாக்குறுதி எண் 285ன் படி பணி நிரந்தரம், ஊதிய உயர்வு உள்ளிட்ட பல கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி சென்னையில் கடந்த 12 நாட்களாக போராடி வரும் தூய்மை பணியாளர்களை இன்று மாலை சந்திக்கவிருந்த தமிழக பாஜகவின் மூத்த தலைவரும், முன்னாள் கவர்னருமான சகோதரி தமிழிசை அவர்களை வீட்டிலேயே தடுத்து நிறுத்த முயன்ற திமுக அரசின் அடக்குமுறை வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. பொதுமக்களின் நலனுக்காகப் போராடும் அரசியல் கட்சி தலைவர்களை திமுக அரசு ஒடுக்க நினைப்பது ஜனநாயகப் படுகொலை.

தூய்மைப் பணியாளர்களின் துயரங்களுக்கு செவிமடுக்காத திமுக அரசுக்கு, அவர்களுக்கு ஆதரவுக் கரம் நீட்டுவோர்களைத் தடுப்பதற்கு மட்டும் என்ன உரிமை இருக்கிறது? தமிழகத்தில் தங்களின் உரிமைகளைக் கேட்டு போராடுபவர்களையும் அவர்களுக்கு ஆதரவு அளிப்பவர்களையும் கைது செய்து, ஜனநாயகக் குரல்வளையை நெரிக்கும் விடியா அரசுக்கு கூடிய விரைவில் முடிவு கட்டப்படும். என தெரிவித்துள்ளார்.

# துருவ் விக்ரமுக்கு ஜோடியாக நடிக்கும் 3 கதாநாயகிகள்!




பாலிவுட் இயக்குனர் நிகில் நாகேஷ் பட் இயக்கத்தில் கடந்த ஆண்டு வெளியான படம் 'கில்'. கரண் ஜோகர் தயாரித்த இந்த படத்தில் லக்ஷயா, ராகவ் ஜுயல், தன்யா, ஆசிஷ் வித்யார்த்தி உள்ளிட்டோர் நடித்துள்ளனர். ஆக்சன் திரில்லர் கதைக்களத்தில் உருவாகியுள்ள இப்படம் மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது.

இந்த நிலையில் இப்படத்தின் தென்னிந்திய மொழி ரீமேக் உரிமையை இயக்குனர் ரமேஷ் வர்மா கைப்பற்றியுள்ளார். 'கில்' படத்தின் ' தமிழ் ரீமேக்கில் நடிக்க துருவ் விக்ரமிடம் பேச்சுவார்த்தை நடந்து முடிந்துள்ளது.வில்லன் கதாபாத்திரத்தில் உறியடி விஜயகுமார் நடிக்கவுள்ளார்.

இந்த நிலையில், இப்படத்தில் துருவ் விக்ரமுக்கு ஜோடியாக நடிக்க 3 கதாநாயகிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது. அதாவது, கயாடு லோகர், அனுபமா பரமேஸ்வரன் மற்றும் கேதிகா சர்மா என மூன்று கதாநாயகிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். கில் படத்தில் ஒரு கதாநாயகி தான் ஆனால், இதன் ரீமேக்கில் மூன்று கதாநாயகிகள் நடிக்கவுள்ளதால் கதையில் மாற்றம் செய்திருப்பார்கள் என தெரிகிறது. விரைவில் இது தொடர்பான அதிகாரபூர்வ அறிவிப்புகள் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.


# ஒருநாள் தரவரிசை: ரோகித் சர்மா 2வது இடத்துக்கு முன்னேற்றம்




ஐசிசி ஒருநாள் கிரிக்கெட் பேட்டர்கள் தரவரிசையில் இந்திய கேப்டன் ரோகித் சர்மா 2வது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

வெஸ்ட் இண்டீஸ் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடரையடுத்து ஐசிசி தரவரிசையை வெளியிட்டுள்ளது. வெஸ்ட் இண்டீஸ் தொடரில் பாபர் அசாம் 3 போட்டிகளில் 56 ரன்கள் மட்டுமே அடித்தார்.இதனால் 751 புள்ளிகளுடன் 3ஆவது இடத்திற்கு சரிந்துள்ளார். ரோகித் சர்மா 756 புள்ளிகளுடன் 2வது இடத்திற்கு முன்னேறியுள்ளார். ஒருநாள்பேட்டர்கள்தரவரிசையில் 784 புள்ளிகளுடன் இந்திய துணை கேப்டன் சுப்மன் கில் முதல் இடத்தில் நீடிக்கிறார். நட்சத்திர வீரர் விராட் கோலி 4வது இடத்திலும், ஸ்ரேயஸ் அய்யர் 8வது இடத்திலும் நீடிக்கின்றனர்.

# சின்சினாட்டி ஓபன் டென்னிஸ்: யூகி பாம்ப்ரி ஜோடி அதிர்ச்சி தோல்வி



பல முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ள சின்சினாட்டி ஓபன் டென்னிஸ் தொடர் அமெரிக்காவில் நடைபெற்று வருகிறது.

இதில் இன்று நடந்த ஆண்கள் இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் இந்தியாவின் யூகி பாம்ப்ரிநியூசிலாந்தின் மைக்கேல் வீனஸ் ஜோடி, ஆஸ்திரியாவின் லூகாஸ் மெய்ட்லர் போர்ச்சுகல்லின் பிரான்சிஸ்கோ கேப்ரால் ஜோடி உடன் மோதியது.

பரபரப்பான இந்த ஆட்டத்தில் யூகி பாம்ப்ரி ஜோடி 63 67 (17), 410 என்ற செட் கணக்கில் தோல்வி அடைந்தது. இதனால் யூகி பாம்ப்ரி ஜோடி இழந்து தொடரில் இருந்து வெளியேறியது

# மதராஸி படத்தின் பிரத்யேக கிளிம்ப்ஸ் வீடியோவின் அறிவிப்பு




தமிழ் சினிமாவில் அனைவராலும் கொண்டாடப்படும் நடிகர் சிவகார்த்திகேயன் பிரபல இயக்குனர் ஏ.ஆர். முருகதாஸ் இயக்கத்தில் தனது 23வது படமான 'மதராஸி' திரைப்படத்தில் நடித்து முடித்துள்ளார். இந்த படத்தில் ருக்மினி வசந்த், விக்ராந்த், வித்யூத் ஜம்வால், பிஜு மேனன், டான்சிங் ரோஸ் சபீர் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். இந்த படத்தை ஸ்ரீ லட்சுமி மூவிஸ் நிறுவனம் தயாரிக்க அனிருத் இதற்கு இசைஅமைத்திருக்கிறார். இப்படம்வருகிற செப்டம்பர் 5ம் தேதி திரையரங்குகளில் வெளியாக உள்ளது.

மதராஸி படம் வெளியாக இன்னும் சில நாட்களே உள்ள நிலையில், படக்குழு படத்தின் கிளிம்ப்ஸ் வீடியோ தொடர்பான அறிவிப்பை வெளியிட்டுள்ளது. அந்த வகையில் கூலி படத்தின் இடைவேளையின் போது சிவகார்த்திகேயனின் மதராஸி படத்தின் கிளிம்ஸ் வீடியோ வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# 2030 காமன்வெல்த் தொடரை இந்தியாவில் நடத்துவதற்கான முயற்சிக்கு இந்திய ஒலிம்பிக் சங்கம் ஒப்புதல்



24வது காமன்வெல்த் விளையாட்டு போட்டி 2030ம் ஆண்டு நடைபெற உள்ளது. 2036ல் நடைபெற ஒலிம்பிக் தொடரை நடத்தும் வாய்ப்பை பெற இந்தியா முயற்சித்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக இந்த காமன்வெல்த் போட்டிகளை இந்தியாவில் நடத்துவதற்கான முயற்சிக்கு இந்திய ஒலிம்பிக் சங்கம் ஒப்புதல் அளித்துள்ளது.

குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் போட்டிகளை நடத்தப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. காமன்வெல்த் விளையாட்டு கூட்டமைப்பிடம் இந்தியா தனது விண்ணப்பத்தை விரைவில் சமர்ப்பிக்கும் என தகவல் வெளியாகியுள்ளது.

இந்தியா ஏற்கனவே 2010ம் ஆண்டில் காமன்வெல்த் போட்டிகளை புதுடெல்லியில் நடத்தியுள்ளது. அப்போது சில குற்றச்சாட்டுகள் எழுந்தாலும், போட்டிகளை இந்தியா வெற்றிகரமாக நடத்தியது.

# "கே.ஜி.எப்"ஐ நிராகரித்த 'பெரிய நடிகர்'...என்ன காரணம் தெரியுமா?



"கே.ஜி.எப்" படத்தை பெரிய நட்சத்திர நடிகர் ஒருவர் நிராகரித்திருப்பது அனைவரையும் ஆச்சரியப்படுத்தி இருக்கிறது.

யாஷின் "கே.ஜி.எப்" படம் முதலில் ஒரு பிரபல நட்சத்திரத்திற்கு வழங்கப்பட்டிருக்கிறது. அனால், அவர் தற்போது கன்னட படங்கள் எங்கு ஓடுகின்றன என்று கூறி அந்த வாய்ப்பை நிராகரித்திருக்கிறார். இதனை தெரிவித்தது வேறுயாறும் இல்லை,கே.ஜி.எப் படத்தை மிகப்பெரிய பட்ஜெட்டில் தயாரித்த ஹோம்பலே பிலிம்ஸ் நிறுவனத்தின் இணை தயாரிப்பாளர் சாலுவே கவுடாதான்.

அந்த பெரிய நடிகரின் பெயரை குறிப்பிடாமல், சில ஆண்டுகளுக்கு முன்பு கே.ஜி.எப் படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க ஒரு பெரிய நட்சத்திரத்தை அணுகியதாகவும், ஆனால் அப்போது கன்னட படங்களுக்கான சந்தை மிகவும் மோசமாக இருந்ததால் அதில் நடிக்க அவர் மறுத்துவிட்டதாகவும் கூறினார்.

கேஜிஎப் படத்திற்குப் பிறகு, ஹோம்பலே பிலிம்ஸ், நாட்டின் முன்னணிதயாரிப்புநிறுவனங்களில்ஒன்றாகஉருவெடுத்துள்ளது. அடுத்து, காந்தாரா: சாப்டர் 1 படத்தை தயாரித்திருக்கிறது. மேலும், பிரபாஸை மூன்று படங்களுக்கு ஒப்பந்தமும் செய்துள்ளது.

# சின்சினாட்டி ஓபன் டென்னிஸ்: ஆடம் வால்டன் அதிர்ச்சி தோல்வி



பல முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ள சின்சினாட்டி ஓபன் டென்னிஸ் தொடர் அமெரிக்காவில் நடைபெற்று வருகிறது. இதில் இன்று நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவின் 3வது சுற்று ஆட்டம் ஒன்றில் ஆடம் வால்டன் (ஆஸ்திரேலியா) செக் குடியரசின் ஜிரி லெஹெக்கா உடன் மோதினார்.

இந்த மோதலில் தொடக்கம் முதலே அபாரமாகசெயல்பட்டு ஆதிக்கம் செலுத்திய ஜிரி லெஹெக்கா 76 (75), 76 (73) என்ற செட் கணக்கில் ஆடம் வால்டனை வீழ்த்தி 4வது சுற்றுக்கு முன்னேறினார். வெற்றி பெறுவார் என எதிர்பார்க்கப்பட்ட ஆடம் வால்டன் அதிர்ச்சி தோல்வி கண்டு தொடரில் இருந்து வெளியேறினார்.

DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.